5. அறிக்கைகள் அளித்தல்

மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன், மனுக்கள் குழுத் தலைவர்.

திரு. பி. எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2003—2005 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 91 முதல் 94 வரையிலான அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

6. விதி 110—ன்கீழ் கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சரின் அறிக்கை

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிலும் மாணவர்களுக்கான பொதுத் தேர்வுகள் தள்ளிவைத்தல் மற்றும் கல்விக் கட்டணம் போன்றவற்றை அரசே ஏற்றுக்கொள்ளுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன்கீழ் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றினை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு கல்வி அமைச்சர்.

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 26-12-2004 அன்று தமிழகத்தின் கடலோர மாவட்டங்களை சுனாமி பேரலைகள் கடும் சீற்றத்துடன் தாக்கியதன் காரணமாக அங்குள்ள மக்கள் தங்களது வீடுகளையும், உடைமைகளையும் இழந்து பாதிக்கப்பட்டதில் அக்குடும்பங்களைச் சேர்ந்த மாணவ, மாணவியரும் பெரும் பாதிப்புக்கு உள்ளாயினர்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த பள்ளி மாணவ, மாணவியர் தங்களது பாடப் புத்தகங்களையும், சீருடைகளையும் இழந்து விட்டனர் என்பதால், அவர்கள் தடையின்றி தங்கள் கல்வியைத் தொடரும் வகையில், பாதிக்கப்பட்ட இடங்களில் 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர் அனைவருக்கும், பாடநூல்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்களையும், இரண்டு செட் சீருடைகளையும் இலவசமாக வழங்க மாண்புமிகு

தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1-1-2005 அன்று ஆணையிட்டார்கள். இதன்படி, இந்த உதவிகள் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மாணவ, மாணவியர்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டு விட்டன.

சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்ட பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர் சுனாமி பாதிப்புகளிலிருந்து மீண்டு, சிறந்த முறையில் பொதுத் தேர்வுக்குத் தங்களைத் தயார் செய்துகொள்ள வாய்ப்பளிக்கும் வகையில், சிறிது கால அவகாசம் வழங்கி, இவர்களுக்குத் தனியாகப் பொதுத் தேர்வு நடத்தப்பட வேண்டும் என்று பாதிக்கப்பட்ட மாணவ, மாணவியரும், அவர்தம் பெற்றோர்களும், மற்றும் ஆசிரியப் பெருமக்களும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குக் கோரிக்கைகள் விடுத்து இருந்தனர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்தக் கோரிக்கைகளைப் பரிவுடன் பரிசீலித்து, சுனாமி பேரலைகள் தாக்கிய பகுதிகளில் உள்ள மாணவ, மாணவியரது எதிர்காலம் எந்த வகையிலும் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்ற நோக்கத்தில், இந்த ஆண்டு 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளை எழுதவுள்ள மாணவ, மாணவியர் தேர்வு எழுதத் தங்களை நன்கு தயார்படுத்திகொள்ளும் வகையில் கால அவகாசம் அளித்திட ஆணையிட்டுள்ளார்கள். இதன்படி, சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள பள்ளிகளில் 10 ஆம் மற்றும் 12 ஆம் வகுப்பு பயின்று வரும் மாணவ, மாணவியருக்குத் தனியே பொதுத் தேர்வுகள் நடத்தப்படும். இந்தத் தேர்வுகள் ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின்னர் நடத்தப்படும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட 13 மாவட்டங்களில், பாதிக்கப்பட்ட 66 மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கான 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் தொடங்கும்; பாதிக்கப்பட்ட 55 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 66 மேல்நிலைப் பள்ளிகள், ஆக மொத்தம் 121 பள்ளிகளில், 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கடைசி வாரத்தில் தொடங்கும். இந்தத் தேர்வுகளுக்கான கால அட்டவணை அரசுத் தேர்வுத் துறை இயக்குநரால் தனியாக வெளியிடப்படும். சுனாமியால் பாதிக்கப்படாத பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவியர்களைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே அரசுத்

தேர்வுத் துறை இயக்குநர் அறிவித்துள்ள கால அட்டவணைப்படி தேர்வுகள் நடத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுனாமி பேரலைகளால் பாதிப்புக்கு உள்ளாகியுள்ள 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவியரின் எதிர்கால நலன் கருதி வழங்கப்பட்டுள்ள இந்தக் கால அவகாசத்தை அவர்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டு பொதுத் தேர்வுகளை வெற்றிகரமாக எழுதிட வேண்டும் என்பது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் விருப்பமாகும்.

முற்பகல் 11-05

சுனாமி பாதிப்பால் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வருவாய் ஈட்டும் தங்கள் குடும்பத் தலைவரை இழந்ததுடன், இலட்சக்கணக்கான குடும்பங்கள் வருவாய் ஈட்டித் தரும் பிழைப்பாதாரங்களை இழந்துவிட்டதன் காரணமாக, இக்குடும்பங்களைச் சேர்ந்த, பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில், குறிப்பாக தனியார் கல்வி நிறுவனங்களில் கல்வி பயின்று வரும் மாணவ, மாணவியர் கல்விக் கட்டணங்களைச் செலுத்த இயலாத நிலையில் உள்ளனர்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலுகின்ற மாணவ, மாணவியரின் எதிர்காலம் எவ்வகையிலும் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக, தங்களது கல்வியை அவர்கள் தடையின்றித் தொடரும் வகையில், அவர்களது கல்விக் கட்டணங்களை அரசே ஏற்றுக்கொள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கல்விக் கட்டணம் செலுத்த இயலாத நிலையில், தங்களது கல்வியைத் தொடர முடியுமோ, முடியாதோ என்று கலங்கி நிற்கும் மாணவ, மாணவியரின் அச்சத்தைப் போக்கி, அவர்களுக்கு நம்பிக்கை அளிக்கும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கீழ்க்காணும் ஆணைகளைப் பிறப்பித்துள்ளார்கள்:

1. சுனாமியால் பாதிக்கப்பட்டு கல்விக் கட்டணம் செலுத்த இயலாத நிலையில் உள்ள மாணவ, மாணவியர்கள் சனவரி 2005 முதல் செலுத்த வேண்டிய கல்விக் கட்டணம் மற்றும் சிறப்புக் கட்டணத்தை அரசே ஏற்றுக்கொண்டு சம்பந்தப்பட்ட கல்வி

நிறுவனங்களுக்கு வழங்கும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்படி, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கான சிறப்புக் கட்டணம் (Special Fees), மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கான கல்விக் கட்டணம் (Tuition Fees), மற்றும் சிறப்புக் கட்டணம், அரசு உதவி பெறும் மற்றும் உதவி பெறாத கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகள் (Professional Colleges), பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்பப் பயிலகங்கள் (Polytechnics) மற்றும் தொழிற்பயிற்சி நிறுவனங்கள் (Industrial Training Institutes) ஆகிய கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவ, மாணவியருக்கான கல்விக் கட்டணம் மற்றும் சிறப்புக் கட்டணம் ஆகிய கட்டணங்களை அரசே செலுத்தும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. மேலும், இம்மாணவ, மாணவியர் தாங்கள் எழுதுகின்ற பொதுத் தேர்வுகளுக்கு செலுத்த வேண்டிய தேர்வுக் கட்டணத்திலிருந்து முழுவதுமாக விலக்கு அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. மேலும், இந்த உதவிகள் 2005-2006 கல்வி ஆண்டுக்கும் வழங்கப்படும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவ, மாணவியரின் கல்விக் கட்டணம், சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் ஆகியவற்றை அரசே ஏற்றுக் கொண்டு செலுத்த இருப்பதால், அத்தகைய மாணவ, மாணவியரிடமிருந்து நேரடியாக எத்தகைய கல்விக் கட்டணங்களையும் வசூலிக்கக் கூடாது என்று அனைத்துக் கல்வி நிறுவனங்களும் அறிவுறுத்தப்படும்.

சுனாமி தாக்குதலால் ஏற்பட்ட பாதிப்புகளை நேரடியாகக் கண்ணுற்ற இளம் தலைமுறையினர் வாழ்க்கைமீது நம்பிக்கையும், அச்சம் நீங்கி துணிவும் கொள்ளும் வகையில் தடையின்றித் தங்கள் கல்வியைத் தொடர்ந்திட வேண்டும் என்ற உயரிய நோக்கத்தின் அடிப்படையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த உதவிகளை வழங்கிட ஆணையிட்டுள்ளார்கள். பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த, பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர் நல்ல முறையில் தொடர்ந்து கல்வி கற்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றுவார்கள் என்று நம்பிக்கை தெரிவித்து அமைகிறேன்.

7. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிதல். திரு. எம்.ஏ. ஹக்கீம்.

திரு. எம்.ஏ. ஹக்கீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 31 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு@ தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வழிமொழிதல், திருமதி வளர்மதி ஜெபராஜ்.

***திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஏ. ஹக்கீம் அவர்கள் முன்மொழிந்த, 'மேதகு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு நன்றி தெரிவிக்கும்' தீர்மானத்தை வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம்.ஏ. ஹக்கீம்.

முற்பகல் 11-10

திரு. எம்.ஏ. ஹக்கீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற இந்தத் தீர்மானத்தின் மீதான விவாதத்திலே இந்தப் பேரவையிலே கருத்துகளை எடுத்து இயம்புவதற்கு உண்டான இந்த வாய்ப்பினை எனக்குத் தந்த என்னுடைய அன்புக்குரிய அம்மா டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். 13 மாவட்டங்களின் கடற்கரைப் பகுதிகளிலே இருக்கின்ற மக்களுக்கு அன்னை தெரசாவாகக் காட்சி அளித்துக் கொண்டிருக்கின்ற தாயே, இந்த நாடே (மேசையைத் தட்டும் ஒலி) உங்களை இன்றைக்குப் பாராட்டிக் கொண்டிருக்கிறது. டிசம்பர் 26, கிறிஸ்துமஸிற்கு மறுநாள், உலகம் அதிர்ச்சி அடையக்கூடிய விதத்திலே இந்தோனேஷியாவில் சுமத்ரா தீவிலிருந்து புறப்பட்ட ஒரு

@ 133 முதல் 168 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.